

# காதலும் கனவும்

ஷெல்லி

சிவராம்

விரைவில் வெளிவரும்

★

தாகூரின்

"சாதனா"

தமிழில்:

ரா. நடராஜன்

*

விலை ரூ. 3—8—0

★

LITERARY ESSAYS by V. R. M Rs. 1/8

# காதலும் கனவும்

ஆசிரியர் :

கவிஞன் ஷெல்லி

தமிழில் :

டி. வி. சுவாமினாதன், B. Sc.

★

ஸ்டார் பிரசுரம்
25-A. சைனா பஜார்
தெப்பக்குளம் P. O. திருச்சி

Tamil Translation from Shelley's Love-Poem "EPIPSYCHIDION"

COPYRIGHT

First Edition.........April 1949

Price Re. 1

PRINTED AT THE CITY PRESS FOR STAR PUBLICATIONS,
25-A, CHINA BAZAAR, TEPPAKULAM (P. O), TIRUCHIRAPALLI.
1000 C. 1949

**சு. இந்திர பவாநி,**
**அருப்புக்கோட்டை.**

## முன்னுரை

---

V. R. M. செட்டியார், B. A.

# காதலும் அழகியும்

காதல் என்றால் என்ன, சாதாரண விஷயமா? அதை எல்லோரும் ஆழ உணர்ந்து அனுபவிக்கும் ஆற்றல் படைத்தவர்களா? பெண்மை என்றால் என்ன? அழகியின் அழகு என்றால் என்ன? பெண்களின் கண்கள் என்றால் என்ன? ஒரு கன்னிப் பெண் புன் முறுவல் பூத்து நிற்பதற்கும், உணர்ச்சியின் விபரீதமான ஆழத்தில் விசாலமாய்ச் சிரிப்பதற்கும் என்ன வேற்றுமை? உண்மைக் கவிஞன், காதலின்மேல் சாய்கின்றானா, அல்லது பித்தன்போலப் பாய்கின்றானா? உடலழகோடு, மனசௌந்தரியமும், ஆன்ம ஐக்கியமும் நிறைந்த அழகியின் பழக்கம், நெருங்கிய மனத் தொடர்பு எப்படி இருக்கும்?—ஆம், நல்ல நல்ல கேள்விகள்தான்! ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி, எப்படி இத்தகைய உண்மைகளை அனுபவ வாயிலாக அள்ளி வீசுகின்றான், என்று பார்ப்போம்.

1820-ல் கவிஞன், ஒரு இதாலியக் கன்னிப் பெண்ணைப்பற்றி ஆழ்ந்த ஆர்வத்துடன் எழுதிய பாடலில், மேலே கண்ட கருத்துக்கள் மின்னவிடுகின்றன. அந்த அழகியைக் கண்டதும், ஷெல்லி, தனது கவிதாவெறியில், அவளை ஒரு லட்சிய அவதாரமாகவே எண்ணிவிட்டான்;

அவளுடைய அழகும், குணமும், ஆன்ம ஜோதியும் அப்படிக் கவிஞனை மயக்கி எழுதவே தூண்டின.

பெண்மையே, ஒரு அபூர்வ சிருஷ்டி: உடல் நலத்திலும், நடிப்பிலும், அழகின் மகோன்னத ஜ்வாலையிலும், நிகரற்றவர்கள் பெண்கள்: அவர்கள் கண்களின் அலைப்புரட்சியில். உலகமே மெய் மறந்து அலைகிறது; முகம் மின்னுகிறது; விழிகள் ஜோடிப் புறாக்கள் போலப் பறந்து வருகின்றன; மின்னும் உதடுகள், உண்மைகளையே காற்றில் வரைகின்றன; பற்கள், மின்னலிடும் வெண்மைக் கடலில் மிதந்து வருகின்றன! ஒரு அழகி, தன் கூந்தலை அலட்சியமாக அள்ளி எறியும்போது, இருளே ஒரு ஓவிய விந்தையாகப் பின்னணி செய்கிறது. பெண்மையின் மூக்கு முனையிலே, உலகம் தொங்கிக் கொண்டிருக்கிறது. பெண்மையின் ஆவியே, சிருஷ்டி விசாலம்.

பெண்மையின் உடல் பூரிப்பை, எந்த பாஷையிலும் எழுதிக்காட்ட முடியாது. அழகியின் உடலும், இயற்கையின் கடலும் ஒன்றாகத் தோன்றலாம். பெண்களிடத்தில், இயற்கையே அதிகமான சலுகை காட்டுவதாகவே தெரிகிறது. பெண்ணின் பால்போன்ற மேனி—மிருதுவான 'உடல்-கடல்'—எவ்வளவு அருமையாகவும் ரம்மியமாகவும் காட்சியளிக்கிறது; மனப் பண்பட்ட அழகியின் நாவிலிருந்து, காதலும்

கலையும் கண் சிமிட்டிக்கொண்டு பவனி வருகின்றன. கண்கள், நட்சத்திர ஜிலுஜிலுப்போடு, ஸ்டார் சன்னங்களைப்போல மின்னலிடுகின்றன. அழகியின் கண்ணோவியத்தில், கவிதைப் பொறிகள் ஒய்யாரமாகவே இன்னிசையோடு விளையாடுகின்றன. கனிகளோடு, பெண்ணை ஒப்பிட்டு அனுபவிக்கலாம்: அழகே உண்மை; உண்மையே அழகு.

மார்பின் விசித்திரம், ஒரு அபூர்வ சித்திரம்; குழந்தையும் கொஞ்சி விளையாடும் இடமல்லவா? காதலன்—காதலி, அழகுக் கடலில் குளிக்கும் இடமல்லவா? மனித வளர்ச்சியை, உறுதிப் படுத்தும் பாற்கடல் அல்லவா? இரண்டு புள்ளிகள், விம்மிப் புரள்கின்ற நிலையில், பால் கதறிப் பதறி வருகின்ற நிலையில், குழந்தையும் காதலனும் புரண்டு விளையாடுகின்ற மகோன்னதக் காதல் கோபுரமல்லவா? சிறந்த காதலின் சிறந்த காதல் மாளிகையென்றுகூடச் சொல்லி விடலாம்! மார்பில் மின்னிப் படர்ந்து அலைகின்ற செந்நிற ரேகை, அலைத்துளி போலவும், ஆகாச ரேகை போலவும் ஆர்ப்பாட்டம் செய்கிறதல்லவா?

உலகத்தையே உறுதியாகப் பற்றி இழுப்பது காதல்: அழகி, ஒரு வால் நட்சத்திரம்; பெண்மையில், எத்தனையோ உண்மைகள் மறைந்து கிடக்கின்றன. படித்த பண்பட்ட அழகி பேசும்போது, பேருண்மைகள் வெளிவரு

இன்றன. கன்னம் கனியக் கனிய, உதடுகள் அசைய அசைய, கண்கள் மின்னலிட, உலகமே கோலிக் குண்டு போலச் சுழல்கிறது. மார்பின் மின்னல் முனைகள், பட்டு ஜாக்கெட்டில் பளிச்சிடுகின்றன; அழகியின் கைகள், அலைந்து அலைந்து அலையோவியமாகவே சதிரிடுகின்றன; மனமோகனக் கூந்தல், காற்றில் ஆனந்தமாகக் கும்மாளியிடுகின்றது;—உலகத்தையே கட்டி யிழுக்கும் இறுமாப்புடன் அழகியின் மார்பில், உலகமே உறங்கிக் குரட்டை விடுகிறது.

அழகு ராணி, சகல பருவங்களும் கடந்தவள்: மாசற்ற இயற்கை, களங்கமற்ற ஜோதியாகவே, அழகியின் உடலை மூடிக்கொண்டிருக்கிறது. ஒரு பெண், ஒரு அழகி சிரித்தாலும் அழுதாலும், உலகமே கலங்கிக் கலங்கிக் கபோதியாகிவிடுகிறது. காதல், கவிதையைத் தூண்டி வளர்க்கும் ஆற்றலுடையது. காதலுக்கும் சாதலுக்கும் மத்தியில், உலகம் உடும்புபோல வாழ்க்கைச் சுவரில் தொத்தி ஏறி கெட்டியாய்க் கவ்விக்கொண்டு நிற்கிறது; விழுந்தால், விபரீதம் தான். ஆனால், அதை யாரும் கவனித்துக் கவலையுறுவதில்லை.

பட்டாடையில் பதுங்கி மலர்கின்ற அழகியின் அபூர்வ ஜிலுஜிலுப்பு, பிரமாதமானதுதான்: ஞானிகளும், ரிஷிகளும்கூட, இதயம் முறிந்து காதற் கோயிலில் சரணாகதி யடைந்திருக்கிறார்களே! இதைவிட, வேறு என்ன காதலின் வெற்றிக்கு அடையாளம் வேண்டும்?

காதலிலே, நம்பிக்கை வளர்கிறது; இயற்கை, அழகு வெள்ளத்தில், இறுமாப்படைகிறது. அழகியின் கண்கள், காதலின் அபூர்வ ரஸகுண்டுகள்; காதலன்—காதலி மன ஐக்கியத்தில் இன்ப உச்சியை, ஏன் இலட்சிய சொர்க்கத்தையே எட்டிப் பிடிக்கிறார்கள்; மன ஒருமை மாறினால், இன்பம் மாறி, துன்ப உலகமான நரகத்தையே சேர்வார்கள். அழிவுக்கும், அழியாமைக்கும் மத்தியில், காதல் சுழல்கிறது; மின்னலிடுகிறது.

கவிஞன் ஷெல்லி, காதலிலே எவ்விதக் கட்டுப்பாட்டையும் நிர்ப்பந்தத்தையும் விரும்பவே இல்லை: இயற்கையின் எழிலை, இயற்கையின் விசித்திர லீலைகளை, சட்டமோ சமூகமோ கட்டுப்படுத்தலாகாது. ஆண்–பெண் சந்திப்பில், அழகியின் மர்ம ஐக்கியத்தில், இயற்கையின் முழுமையும் நின்று நிலவவேண்டும்; செயற்கை, செங்குத்தாய் வந்து சாயக் கூடாது. இயற்கை மலர் போன்றது; காதல் இயற்கையும் அப்படித்தான். இதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. பெண்மை மலரும் போது, இயற்கையின் இறுமாப்பை இடர்ப் படுத்தக் கூடாது. காதலன்–காதலி அழகுக் கடலில் குளித்து இன்புறும் போது 'சட்ட நாய்' குலைக்கக் கூடாது. இயற்கையின் முழுமையைக் கவிஞன்தான், ஆழமாய், மிகமிக ஆழமாய் உணரமுடியும். காதலன்—காதலி ஜோடிதான் இயற்கையின் முழு இங்கிதத்தையும் ரசித்து இன்பக் கடலாட முடியும்;

(பணச் சுமையின் கீழ், காதல் முன் வராது; சட்ட முனையில், காதல் சவம்போல உறங்காது;) இயற்கையின் முழு இங்கிதத்தையும் அனுப விக்க, காதலன்–காதலி ஜோடிக்குத்தான் அந்த உரிமை, ஒப்பற்ற உரிமை உண்டு.

அழகியின் கண்கள் சுழலும்போது உலகமே உருண்டு திரண்டு பாற்கடலாகவே மாறிவிடு கிறது; பெண்மையே, பேருண்மைக் கடல்; பெண்களின் கண்கள்,–தேன் துளிகள், கற்கண்டு அலைகள், கண்ணுடிக் கோலிக் குண்டுகள், என் றும் தித்திக்கும் 'குலாப் ஜான்'; அவர்களின் காதல்—நாவினின்று உதிர்கின்ற சொற்கள், ரஸகுல்லா–ரீங்காரம்!

ஆஹா!

கம்பனின் சீதையும், ஷேக்ஸ்பியரின் ஜூலி யட்டும், தாகூரின் சித்திராவும் காதலின் ஆழத் தையும் பூரிப்பையும் நன்கு உணர்ந்தவர்கள் அல்லவா? இயற்கையின் எழிலோவியமான சௌந்தரிய ஜிலுஜிலுப்பை, கவிஞர்கள் உண்மையாகவே வருணிக்க முடியுமா, என்ன? (ஊமைச் சொற்களுக்கு உணர்ச்சியூட்டி முலாம் பூசியல்லவா கவிஞர்கள், பெண்மையை பாஷை யில் அலங்கரிக்கிருர்கள்;) கவிஞன் உள்ளம், கற் பனை யுலகில் நீண்ட நேரம் சஞ்சாரம் செய்து உண்மையின் எல்லையையும் பெண்மையின் எழிலையும் அளவிட்டு, அதன்பின் அனுபவ உலகில் பாய்ந்து இன்ப உச்சியில் ஆனந்தவெறி

யில் பெண் வடிவங்களையே சிருஷ்டி செய்ய முன்வருகிறது. கவிஞனும் சிருஷ்டி ஜாலத்தில் ஈடுபட்ட ஓவியச் சிற்பிதான். ஷெல்லியும் கற்பனையுலகில், ஒரு நிகரற்ற கவிஞன்தான்— சிந்தனைச் சிற்பி!

திரு. டி. வி. சுவாமிநாதன், B. Sc. ஷெல்லியின் அரிய காதற்பாட்டை மிக அருமையாகவே, நுட்பமாகவே, ஆங்கில மூலத்தின் கவிதை எழிலை மங்கவிடாமல், இனிய தமிழில் பெயர்த்துத் தந்திருக்கிறார்: மூலத்தின் சந்த எழில்கூட, சில இடங்களில் ஒளியுடன் பிரதிபலிக்கிறது. சில பாடல்கள், காதற் சித்திரங்களாகவும், காதற் கோபுரங்களாகவும், காதற் சுனைகளாகவும், காதற் கனிகளாகவும், காட்சியளிக்கின்றன; இளைஞன் கவிதையில், இதய மத்தாப்பு மின்னலிடுகிறது; இதய கீதம் சூறைக் காற்றாகவே சுழன்றோடி வருகிறது:

"கஞ்சமலர்ப் பாதத்தால் புகைத்துகிலைப் பாவுகின்றாள்;
கற்பனையின் கடற்கரையில் ஓர்குன்றின் சதுக்கத்தில்
செஞ்சிலம்பின் விஞ்சுமொலி நாதத்தின் ஜாலவித்தை
செவிகளிலே புல்லரிக்கக் கண்பறிக்கும் சொக்கழகு
மிஞ்சுகின்ற ஆடைகளை அரவணைந்து காரிருளில்
மின்னலைப்போல் என்னையவள் சந்தித்தாள் ஆதலினால்
நெஞ்சிழந்தேன் சொல்லரிய அலங்காரச் சோபிதத்தில்!
நேத்திரங்கள் இரண்டிருந்தும் அவளை நான்
பார்க்கவில்லை!"

* * *

காதலின் வேகத்தையும் ஆழத்தையும் எடுத்துக் காட்டும் 'வேலைக்காரி' படத்தில் உள்ள பாடல்களைப் பாருங்கள் :

" மேதினிமேல் மேன்மையெலாம் பெண்களாலே
காதலெனும் ஜோதிஇன்பக் கனிகளாலே "

* * *

" இருவிழிதனிலே புகுந்தான்—என்
இதயவானில் அமர்ந்தான் "

'சிடாடல் ஞானசௌந்தரி'ப் படத்தில், காதல் இன்பவெறியைத் தாண்டித் துன்ப உலகில் புகுந்து, ஊசலாடித் துடித்துக் குமுறிக் கண்ணீர் மழை பெய்து, மீண்டும் இன்ப விண்ணையே எட்டிப்பிடிக்கிறது.

* * *

ஸ்ரீ யோகியார் எழுதியிருக்கும் 'மேரிமக்தலேனா' பாடலில், பெண்மையின் சௌந்தரியம் மின்னலோவியமாகவே நம் கண்முன் வந்து விளையாடுகிறது : அழகியின் அந்தரங்க உடலோவியத்தில், உணர்ச்சி அலைகள் புரட்சிப் படலங்களாக விரியும்போது, அவளை வருணிக்கும் கவிஞன் சொற்கள் தீங்கரும்பும், அமுதும் செழுந்தேனுமாகவே மாறிவிடுகின்றன. (இது ஒரு கவிஞனின் கற்கண்டுக் கோட்டை.)

ஆஸ்கார் ஒயில்டின் 'சலோமி' நாடகத்தில், பெண்மையின் அபூர்வ போதையே சுற்றிச் சுற்றி வந்துவிடுகிறது. இதுவே அழகு மண்டிய

ஒரு 'குமரியின் சபதம்'. உணர்ச்சிச் சூறையில், காமவெறியில், சொற்கள் சிறகடித்துப் பறந்தே வருகின்றன; அழகும் மொழியும், உண்மை உலகில் பின்னி மின்னிப் படர்கின்றன; பெண்மையின் காம நெருப்பு, ஞானியின் தலையையே வாங்கிவிடுகிறது.

நந்திக்கலம்பகத்தில், காதலின் ஆழமும் விஸ்தீரணமும் தொடர்ந்த இன்ப லீலைகளும் மிக மிக நுட்பமாகவே, தமிழ் இலக்கியத் தேனுகவே, மின்னலிடுகின்றன. காதலின் இனிய வேதனையின் எல்லையே, ஓரளவு தெரிந்துவிடுகிறது—ஆம்!

# INTRODUCTION:

BY V. R. M. CHETTIAR, B. A.

Shelley's "Epipsychidion" is a love-poem on Emilia, a woman of graces and accomplishments. She is in prison, particularly deserving sympathy from young ardent lovers. She has beauty of person, beauty of intellect, and beauty of soul.

She looks like "the very Seraph of Heaven too gentle to be human, veiling beneath that radiant form of Woman all that is insupportable of light and love and immortality." She is a well of sealed and secret happiness; She is one intense diffusion, one serene omnipresence; love is like understanding that grows bright, gazing on many truths into the dreary cone of our life's shade; Love is

> "One hope within two wills, one will beneath
> Two overshadowing minds, one life, one death,
> One Heaven, one Hell, one immortality and one annihilation."

This is Shelley's high poetic conception of love and woman as the very harmony of nude Nature's lavish graces in dreaming clay, with lightnings of soul. Emily's touch is as electric poison, and her voice thrills and enthrals humanity. Man should neither meddle with, nor muddle Womanhood.

This poem is Shelley's sweeter recollection of Emily, incarnated in enduring verse; here Remembrance borrows Fancy's Glass to recreate the reminiscence of fragrant memory; Shelley insists on the free-love theory, as Nature's unfettered code of conduct. Man and Woman dream deeper dreams of Life's perennial plenty, and dissolve themselves into wet winding harmonies of unending bliss; to interrupt their harmony and provoke dissonance is heinous and most unwelcome.

Sri. T. V. Swaminathan's Tamil verse rendering at once discloses the Poet's Voice of winged joy rippling round the rapturous theme of Love in all its vivid minuteness: details kiss deeper details of emotion, directed by the subtler individuality of intellectual conscience. Thoughts of higher consciousness bill and coo and murmur, arriving at the Citadel of Personal Intuition.

Truth is white and perennially pure, when its receptiveness is tried in the white furnace of trial converging to deeper comprehension. Love, sublime love sweetens and perfumes existence.

Yes—!

## சமர்ப்பணம்

---

பேரறிஞர்—பேச்சழகர்—பெருந்தியாகி
மதுரை ஸ்ரீ எல். கிருஷ்ணசாமி பாரதி, M. A. B. L.
[அ. நி. சபை அங்கத்தினர்]
அவர்களுக்கு

★

## நன்றியுரை

---

இந்த நூலின் சில பகுதிகள்
அமுதசுரபி, ஹிந்துஸ்தான், காலச்சக்கரம்,
காதல் பத்திரிகைகளில் வெளியானவை.
அவற்றின் ஆசிரியர்களுக்கு
— எனது நன்றி —

# அரிய தமிழ் நூல்கள்

* சிறந்த சிறுகதைகள்
—ஆஸ்கார் ஒயில்ட் ரூ. 1—4—0

* கல்லறை மோகினி
—'சோமு' ரூ. 3—0—0

* இளவேனில்
கவிதைகள்—'சோமு' ரூ. 2—0—0

# காதலும் கனவும்

கருகிவிட்ட ஞாபகத்தில்
    கிளைத்தெழுந்த அரும்புகளைக்
கனிவுடனே தொடுத்தவற்றின்
    மலர்ச்சரத்தை என்னுடைய
இருதயத்துக் கோவிலிலே
    தொங்கவிட்டு வணங்குகிறேன் ;
இனிமைதரும் உருவகமே !
    துயரத்தால் நீர்துளும்பி
புருவங்கள் நனைந்திடவே
    நீகதறும் அப்பெயரைப்
பேரரசாய்க் கொண்டிருந்த
    அகதியவள் சோதரியே !
திருடனெனச் சிறையடைந்த
    பறவைநீ கூண்டிருந்து
திகட்டிவிடா இசைவெள்ளம்
    தருகின்றாய் ; அதைக்கேட்டு 1

உனைக்கைது புரிந்தவரின்
குரூரமுள்ள இருதயங்கள்
உருகிவிடும்,—அவர்களெலாம்
நாதலயம் தித்திக்கும்
சுனைப்பரப்பை வருடுகின்ற
இளந்தென்றல் போலினிக்கும்
சுருதிஒலி தனக்கிங்கே
செவிடர்கள் அல்லவெனில்;
எனைத்தினமும் பரவசத்தில்
ஆழ்த்துகின்ற பாடகனே!
என்கவிதை உன்ரோஜா;
வெளிறிவிட்ட அதனிதழ்கள்
நினைவுகளின் வெம்மையினுல்
வாடியவை! ஆனுலும்
நின்றுலவும் வாசமுடன்
ஓர்மென்மை அதிலுண்டு. 2

புண்ணுறவே தைக்கின்ற
முள்ளதுவும் அதிலில்லை;
பூமியிலே தங்குகின்ற
தருணத்தில் துடிதுடிப்பால்
மண்ணுலகின் கீழ்மைகொண்ட
இருள்நிழல்கள் தனிலுயர்ந்து
மனவிசும்பில் வட்டமிடும்
எண்ணத்துத் தோகைகளின்
வண்ணமெலாம் உதிர்கின்ற
வரையில்நீ எப்பொழுதும்
வாழ்க்கையிலே உணர்ச்சிகளைத்
தடுத்துநிற்கும் கம்பிகளில்
விண்நாடிச் சிறகடிக்கும்
வேட்கையுடன் மோதுகிருய்;
வீண்முயற்சி என்ருலும்
களைத்துவிடா இருதயமே! 3

காயமுற்று மூச்சிரைக்கும்
உன்னுடைய மார்பகத்தில்
கசிந்துவரும் உதிரத்தால்
நீமுடங்கிக் கிடக்கின்ற
தாயகத்தின் தன்மையில்லாக்
கூட்டினையே நினைக்கின்றாய்;
தனியேநீ வாடுகின்ற
பரிதாபத் துயர்க்காட்சி
நேயமுள்ள என்நெஞ்சை
உறுத்துவதால் கண்ணிரண்டும்
நீர்ப்பெருக்கைக் கொட்டுதற்கு
பதிலாகச் சிறைவாழ்வில்
மாயுமுந்தன் மீட்சிக்கோர்
வழிஉதவப் பயன்பட்டால்
மகிழ்ச்சியுடன் என்னுயிரின்
இரத்தத்தைச் சிந்திடுவேன். 4

விண்ணுலகின் தூதுவனே!
மனிதர்களின் உள்ளத்தில்
வீசுகின்ற போர்ச்சுழலைத்
தாளாது உன்மென்மை;
பெண்மைதரும் வனப்பினொளி
விகசிக்கும் புறஉருவப்
பேரெழிலாம் போர்வைக்கீழ்
ஒளித்திருப்பாய் உன்னகத்துப்
பண்புகளில் தாங்கவல்லா
அம்சங்கள் அத்தனையும்;
பாசஒளி கதிர்வீசும்;
அமரத்வம் நகைகாட்டும்.
எண்ணரிய நிரந்தரத்துச்
சாபத்தில் நீஉய்வு!
ஏற்றிவைத்த சுடர்மகிமை
இருளடைந்த வையகத்தில்! 5

மேகத்துப் படலத்தின்
மேல்மிதக்கும் மதியம்நீ !
மேதினியின் சடலங்கள்
மத்தியில்நீ உயிர்உருவம் !
வேகமுடன் உறுமுகின்ற
புயல்மீது புன்சிரிப்பில்
வெள்ளியினைக் குளிர்ச்சியினால்
உருக்கிவிடும் தாரகைநீ !
மோகவெறி ரசவாதம்
இயற்கையெனும் கலையரங்கில்
மோதுகின்ற வேற்றுமைகள்
சங்கமித்த சேர்க்கைநீ !
சோகத்தின் சோபிதம்நீ !
அதிசயம்நீ ! அச்சம்நீ !
சூரியனின் ஜாஜ்வல்யப்
பிரதிபலிப்பில் ஒளிர்வதுபோல் 6

பார்வையைநீ ஊன்றுகின்ற
பொருள்யாவும் உன்னுள்ளே
பளபளக்கும் கண்ணாடி ;
உன்பொலிவைத் தங்களது
கோர்வையினால் மறைக்கின்ற
நிழற்சொற்கள் கூட இன்று
கோலஒளி மின்னல்போல்
வழக்கமிலா விறுவிறுப்பில்
ஆர்வமுடன் சிறகடிக்கும் ;—
ஆதலினால் சோகஒலி
அடிவர்ணம் இட்டிருக்கும்
இப்பாடல் இழையினிலே
நேர்ந்திருக்கும் பிழைகளைநீ
பொறுத்திடுவாய் ! இன்றென்று
நின்னிடத்தில் பிரார்த்திப்பேன் ;
நித்யத்வம் இதற்கருள்வாய் !! 7

புனிதமுள்ள பனிச்சரம்போல்
பூக்கின்ற நீர்த்துளிகள்
புண்ணியமாம் உன் ஆன்மா
இருட்பாதை தனில்வீசும்
இனிமையுள்ள இருசுடர்கள்;
துயரம்ஓர் பரவசமாய்
இங்கிதத்தின் உருவெய்தும்
வரையில்நீ அழுதிடுவாய்!
கனிவுடனே அப்புறம்நீ
புன்முறுவல் செய்துவிடு!-
கவிதைநான் இயற்றியது
சாகாமல் நிலவிடவே;
எனினும்நான் இளமையதன்
ஆதரிசம் இவ்விதத்தில்
என்முன்னர் இறந்திடுமுன்
எதிர்ப்படுமென் றெண்ணவில்லை. 8

உன்னுடைய காதலன்நான்
எமிலியெனும் ஏந்திழையே!
உலகமிது உன்பெயரை
அறியாத காரணத்தால்,
தன்னுடைய மதிப்பில்லா
அவமானப் பார்வையிலே
தப்புவிக்க என்காதல்
தனையிங்கு ஒளித்துவிடும்.
இன்பமுதே! இருவரும்நாம்
ஓர்தாயின் வயிற்றினிலே
இரட்டையராய் வந்துதித்து
வாழ்வினிலே புகுந்திருந்தால்...!
இன்னுமொரு மடந்தைக்கு
என்னிதயம் ஈந்தபெயர்
இணைத்திருந்தால்,—உணர்வுறவில்
உன்னையவள் சோதரியாய்! 9

அமரத்வப் பிழம்பினிலே
அலருகின்ற இருமலர்கள்
ஆசையுடன் ஒன்றிலொன்று
உட்கலக்கும் மோனமணம்
கமழ்ந்திருக்கும்; ஆனாலும்,
காரிகையர் இருவரிலே
கடமையதன் சட்டபலம்
காதல்உற உரிமையுடன்
அமர்ந்திருந்த போதினிலும்,
இந்தஇரு சொற்றொடரும்
ஆசையினால் என்னுளத்தில்
நெருங்கியவை என்றாலும்,
தமியன்நான் எத்தனைக்கு
உனதானேன்;–உலகத்தில்
தஞ்சமின்றி என்பதனை
சித்தரிக்கப் போதாது. 10

இல்லையில்லை; நானுன்றன்
உடைமையிலோர் பொருளல்ல!
இணைபிரியா ஒருபாகம்;–
உன்னில்நான் உணர்வுற்றேன்!
எல்லையிலாப் பி(ே)ரமையினால்
விட்டில்போல் வட்டமிட்ட
என்னுடைய கவிச்சிறகை
எரித்திட்டாய், எழில்விளக்கே!
அல்லதுஓர் இறக்கின்ற
அன்னம்போல் இசைப்பெருக்கை
அள்ளிவிட்டு உயரும்நீ
யார்யாதோ என்பதனைப்
பொல்லாத இளங்காதல்
காலத்தின் காதுகளில்
போதிக்க வேண்டும்; அதன்
நரைத்தநடை தனிலேயே. 11

வரமளித்து வரமடைய
வந்துதித்த உன்னிடத்தில்,—
வாஞ்சையுள்ள ஆன்மாவே!—
மாய்மாலம் ஏதுமில்லை;
சுரந்துவரும் புதுப்புனலின்
இங்கிதமாம் இன்னிசைபோல்,
சுந்தரமாம் சுடரொளிபோல்,
சுருதியில்லா வாழ்க்கையிதன்
கரகரப்பை முறியடித்துக்
கவ்வுகின்ற காரிருளின்
கணங்களையே விரட்டிவிடும்
உவகைக்கோர் கிணறுவாய்!
விரைவாக நகருகின்ற
வானகத்தில் நீமட்டும்
வீற்றிருப்பாய் நிலையாக,
ஒற்றைத்தனி விண்மீனாய்! 12

சிணுங்குகின்ற இருள்முகத்தில்
ரேகைவிடும் புன்முறுவல்!
சீற்றமுற்று உறுமுகின்ற
குரல்களுக்கு மத்தியிலே
பணிவாகப் பதிலிறுக்கும்
பரிவாசை ஒலியாவாய்!
பாசமுள்ள ஓர்தீபம்!
இனிமைதரும் ஒருதனிமை!
முணுமுணுத்துப் பின்தொடரும்
புன்மைகளில் ஓர்தஞ்சம்!
மூண்டுஎழும் துயரத்தை
கொடும்பகலின் வெப்பத்தை
தணிவித்துத் துயில்விக்கக்
காதலிடம் இசைகற்றோர்
தாலாட்டுப் பாடல்பல
பயில்கின்ற வேய்ங்குழல்நீ! 13

புதையுண்ட பொக்கிஷம்நீ!
சிறகில்லா இன்பத்துப்
புத்திளமை நினைவுகளின்
ஒருதொட்டில்! நீலத்தால்
சிதைத்துணியைப் போர்த்துள்ள
அல்லல்களின் கல்லறைநீ!
சிலிர்க்கின்ற கற்பனையின்
உலகத்தை அளக்கின்றேன் ;-
ரதிக்கடலாய் உனைப்போன்று
எழிற்குழம்பில் குளித்தெழுந்து
ரம்மியமே கொஞ்சுகின்ற
ஒருத்தியினைத் தேடிடவே!
அதிலேநான் இன்றளவில்
வெற்றிதனைக் காணவில்லை ;
ஆயாசம் உற்றுஎந்தன்
பலவீனம் தானறிவேன். 14

சந்தித்தாள் என்னை அவள்
முற்றிலுமோர் வேற்றாளாய்,
சங்கடங்கள் மலிந்திருக்கும்
வாழ்வுலகின் முள்வழியில்!
சுந்தரமாம் மரணத்தை
நாடிஎன்னை ஈர்த்திழுத்தாள்;
சூழுமிருள் நடுநிசியின்
பாதத்தைப் பின்தொடர்ந்து
வந்துவிடும் வைகறைபோல்,
கார்காலம் தனையடுத்து
வசந்தருது மண்டுதல்போல்,
அடுத்தடுத்து இன்னலுற்று
நொந்திருக்கும் இதயத்தின்
துயரத்தை விரட்டிவிட
நொடிப்பொழுதில் நம்பிக்கை
உதித்தல்போல் கைபிடித்தாள். 15

உள்ளுணர்வில் ஊற்றெடுக்கும்
உவகையினால் தன்னுடைய
ஒயிலுடலின் பளுவில்லாத்
தன்மையினை உணர்ந்துகொண்டு
துள்ளுகின்ற கலைமானைக்
காட்டிலுமே துடிப்புடையாள்;
துளிப்பனியின் முகில்கீழே
நிர்மலமாம் வானத்தில்
புள்ளிச்சுடர் கோலமிட்டு
சிருங்காரச் சிறகடித்துப்
புடைசூழும் தாரகைகள்
மத்தியிலே மாசிமதி
அள்ளிவிடும் சீதளத்தால்
சிரிப்பதுபோல் அவளுருவின்
அமரஒளி மேனிஎழில்
நாடிகளில் நடுங்கியது. 16

தேனலைகள் துளும்புகின்ற
குவளைமலர் இதழ்க்குழிவில்
தேங்குகின்ற தித்திக்கும்
திரவஇசை துளித்துளியாய்க்
கானலயம் சிந்திஎந்தன்
அறிவினையே கொல்லும்ஒரு
காதல்மிகும் மோகவெறி
தனைமூட்டும்; அதன்லயத்தில்
மோனவெளி விசும்பினிலே
கிரணங்கள் இசைக்கின்ற
மோகனமாம் கார்வைகளை
நுகர்ந்திதயம் சுழல்கிறது!
வானவெளித் தாரகையின்
வடிவங்கள் அவளுடைய
வாஞ்சைமிகும் கருவிழியில்
நளினமுடன் நடனமிடும்!! 17

அகத்துள்ளே ஆன்மாவின்
மின்னொளிக்கீழ் கொந்தளிக்கும்
ஆழமுள்ள கிணறுகளில்
பொலிகின்ற கதிர்க்கரங்கள்
மிகச்சுருங்கி விட்ட இந்தச்
சிந்தனையின் எல்லைகளை
மீறியது ; அறிவுணர்வும்
அதைக்கணிக்கப் போதாது !
ககனவெளி மீதிருந்து
கிளம்புமவள் ஜோதிஉரு
கனமின்றிச் சவம்போல
மிதக்கின்ற குளிர்காற்றில்
உகந்ததொரு உஷ்ணத்தை
சிக்கலின்றி இழையேற்றும் ;—
உணர்ச்சியுடன் ஒட்டத்தைக்
காதலினால் உட்கலந்து. 18

வெண்பனியை நிகர்க்கின்ற
மாருதத்தில் காலை இள
வேனிற்றின செந்நிறத்து
உயிர்நாடி துடிப்பதுபோல்
கண்கவரும் வனப்புடையாள்
கன்னத்துக் கதுப்பழகில்,
கனிவண்ணம் பாய்ச்சுகின்ற
கோடுகளின் கோமளத்தில்,
பெண்ணரசி கைவிரலின்
நுனிகளிலே தடையின்றிப்
பொங்குகின்ற யௌவனத்துச்
செங்குருதி பொலிவேற்றும் ;
மண்வானம் தீகாற்று
நிலமெங்கும் நிரம்பியுள்ள
மாசில்லாத் தெய்வீகம் !
உத்வேகப் பிரவகிப்பு !! 19

தொடர்ச்சியுடன் நீண்டிருக்கும் ;
ஒருபோதும் முடியாது !
தொலைதூரத் திருப்பத்தில்
கொடிபறக்கும் அந்தஎழில்
அடக்கிவிடும் உலகத்தை
ஆர்வத்தால் ஒருபிடியில் ;
அதற்குப்பின் அகிலத்தை
ஊடுருவி நிரப்பிவிடும்
வடிவழகின் கண்காணுக்
கோடியிலே களிநடனம் ;
வண்ணமலர் மடலவிழ
விசிறிவரும் வாசம்போல்,
உடல்வனப்பில் நழுவுகின்ற
உடையினிலே கூந்தலிலே
உதிர்ந்துவிழும் உள்ளத்தை
இதமுறுத்தும் ஓர்சுகந்தம். 20

அவளுடைய வேகத்துச்
சுழற்சியிலோர் குழற்கற்றை
அவிழ்ந்துவிடில் அதிலிருந்து
கிளம்புகின்ற பரிமளத்தால்
தவழ்ந்துவரும் மென்காற்றே
திகட்டிவிடும் ; புலனுணர்வைத்
தாண்டியதோர் திணறடிக்கும்
வாசனைதான் ஆன்மாவில்,—
குவிந்திருக்கும் மலர்முகையின்
இருதயத்தில் உருகிவிழும்
கொதிக்கின்ற தீக்கங்கின்
பனித்துளிகள் போல்தங்கும் ;
துவளுகின்ற இடையினிலே
வாழ்வொளியும் காதலுமே
துடிதுடிக்கும் மனிதஉருப்
பேர்ந்துஅதோ நிற்கின்றாள் ! 21

பொங்கிஎழும் தூய்மைஎழில்
    தோய்ந்திருக்கும் தாவள்யம்!
பொற்கனவின் நிழல்வடிவம்!
    சாஸ்வதத்தின் விக்கிரகம்!
இங்குமங்கும் மாறுதல்கள்
    முளைத்திடினும் எந்நாளும்
இறந்துவிடாச் சேதனம்தான்!
    வாழ்க்கையெனும் பெருங்கடலில்
மங்குகின்ற அலைகளையே
    தன்னுடைய அசைவதனால்
மனம்போல இயக்குவிக்கும்
    காதலெனும் சந்திரிகை
தங்கமுலாம் பூசுகின்ற
    புனல்பரப்பில் பிரதிபிம்பம்!
தளிரிளமை வசந்தருது
    வைகறையின் அன்வயமே. 22

பங்குனியின் எச்சரிக்கை
    உறைபனியின் பிரேதத்தைப்
பதனழித்துக் கோடையெனும்
    கல்லறையில் புதைப்பதுபோல்,
மங்கைஅவள் புன்மைகளைப்
    புதைத்துவிடும் ஒருதோற்றம்!
மரகதத்துத் தீவென்னும்
    அலைக்கனவின் நிதரிசனம்!
எங்கேநான் ஏறுகிறேன்?
    என்செய்யத் துணிந்திட்டேன்?
எப்படிநான் இறங்குவது?
    தரைத்தளத்தைத் தொட்டபின்னர்
இங்குஉயிர் வாழ்வதுவும்
    எங்ஙனமோ? கொடிதம்ம!
இருந்தாலும் ஒன்றறிவேன்;—
    என்னிதயம் அத்தாட்சி! 23

காதலது உலகத்துப்
பொருளையெலாம் சமப்படுத்தும்!
கரம்பைமண் கட்டிக்கீழ்
நெளிகின்ற புழுவும்தன்
நாதனிந்த நீணிலத்தைப்
படைத்திருக்கும் கடவுளுடன்
நலமுறவே வழிபாட்டில்
பிரேமையினுல் பிணைந்துவிடும்!
கோதில்லா மனையாளே!
சோதரியே! தேவதையே!
கொலுஅமரும் தாரகைகள்
துளியேனும் பூக்காத
பாதையிலே ஏகுகின்ற
ஊழ்வினையின் சாரதிநீ!
பரிவினிலே தாமதித்தேன்;—
பிஞ்சினிலே பித்தேறி. 24

சிரஞ்சீவிச் சோலைகளில்
தெய்வீகச் சூழ்நிலையில்
சிலிர்க்கின்ற உன்னுணர்வை
என்னிதயம் முதன்முதலில்
கரங்கூப்பித் தொழுதிருக்கத்
தான்வேண்டும்; அல்லவெனில்
கன்னிகைஉன் பக்கத்தில்
பிறப்பெடுத்த நாள்முதலாய்
பரந்திருக்கும் பூதலத்தின்
வழிநடந்து வந்திருப்பேன்;—
பாசநகை சிந்துமெழில்
வஸ்துவுக்கோர் நிழல்வடிவாய்!
இருந்தாலும் இப்பொழுதைப்
போலல்ல, ஏந்திழையே!
இயம்பவொண்ணுக் காதலின்று
பூண்டுள்ளேன் உன்மீது. 25

உண்மை! நான் உணர்கின்றேன்;
பாசநிறை என்னிதய
ஊற்றுக்கண் மீதிலொரு
முத்திரையே உண்டுஅந்தத்
தண்ணீரை அழுக்கின்றித்
தூய்மையுடன் உன்பொருட்டு
தனியாக வைத்திருக்க;
ஏனென்றால் நீஅந்தக்
கண்ணீரின் திரளில்ஓர்
மனமகிழ்ச்சி உறுகின்றாய்!
கமகங்கள் இழைகின்ற
இசைநெளிவில் இரண்டைப்போல்
பெண்ணேநான் உனக்கென்றே,
காரிகைநீ எனக்கென்றே,
பெற்றுள்ளோம் மனிதஉரு;—
பேதங்கள் இருந்தாலும்! 26

தொடர்போடும் காற்றினிலே
நடுநடுங்கும் இலைகள்போல்
தொனியினிலே மிகவினிய
குரலலைகள் தமைத்தோற்றி,
இடைவழியில் முரண்பாடு
ஏதுமின்றி இசைபயிற்றும்
இதுபோன்ற பேதங்கள்;
உணர்ச்சியங்கு குமிழியிடும்!
நெடிதுயர்ந்து நிமிர்ந்துநின்ற
நெஞ்சங்கள் பலவற்றின்
நினைவுகளும் குறிக்கோளும்
மோதுண்டு துகள்தெறித்துத்
தடையங்கள் கூட இன்றிப்
போவதற்குக் காரணமாய்த்
தலைநிமிரும் வெறுப்புகளைச்
சாடிடவே பணிக்கின்றாய். 27

ஆசைக்கோர் நாயகியை
 அல்லதொரு சிநேகிதனை
அவரவர்கள் கும்பலொன்றின்
 நடுவிருந்து தேர்ந்தெடுத்து
காசினியில் மற்றுள்ள
 அனைவரையும் அலட்சியத்துக்
காடாந்த காரத்தில்
 ஆழ்த்துவதைக் கோட்பாடாய்
வீசுகின்ற பெரியோரின்
 திருக்குலத்தில் ஒருநாளும்
வீழ்ந்திலன்நான் !— தற்கால
 நெறிமுறைமை இதுவெனினும்;
தூசிமிகப் போர்த்திருக்கும்
 களைப்புற்ற கால்களினல்
தொன்றுதொட்ட பாதையினில்
 நடைபோடும் அடிமையர்தம் 28

இல்லத்தை அடைவதற்கு
 இறந்தோரின் மத்தியிலே
இயங்குகின்ற வழக்கமெனும்
 ராஜரிகப் பாதைவழி
தொல்லைமிகும் தொலைதூரப்
 பயணமெலாம் சங்கிலிபோல்
தொந்தத்தால் பிணைப்புண்டு
 தொடரும்ஒரு நண்பனுடன்,
இல்லையெனில் இதயத்தில்
 கனன்றுஎழும் பொறையின்மை
இயக்குவிக்கப் பின்பற்றும்
 எதிரியுடன்,— ஏகுகிறர் !
கல்லுக்கும் மண்ணுக்கும்
 கனகமணிக் குவியலுக்கும்
காதலுக்கும் இடையிலுள்ள
 பேதமெல்லாம் இவ்வளவே !— 29

துளித்துளியாய்ப் பகுத்திடினும்
காதலதன் மாட்சிமையைத்
துளிக்கூடக் குறைத்திடவோ
அகற்றிடவோ ஒண்ணாது;
களிதுளும்பும் பலதரத்து
உண்மைகளில் உன்னிப்பாய்க்
கண்பதித்து விளக்கமுறும்
உளத்தெளிவை நிகர்க்குமிது!
நெளிந்தோடும் பிறையென்னும்
புழுவைத்தன் பரிதியொளி
நேத்திரத்துப் பிரதிபலன
மின்னலினால் அம்பெய்து,
ஒளிஊற்றும் கற்பனையால்
உள்ளத்தின் ஆழத்தில்
ஒளிந்திருந்த ஒயில்சிரிக்கும்
கனவுகளைத் தூண்டிவிட்டு 30

கொஞ்சுமெழிற் கோலஒளி
கொப்பளிக்க ஆயிரமாய்க்
கோர்வையுடன் பதித்திருந்த
கண்ணாடித் தந்திரம்போல்,
விஞ்சுமிசை நளினத்தால்
வையத்து வெளியையெலாம்
விண்ணிருந்து மண்வரையில்
கண்கூசும் பச்சைநிறம்
மஞ்சளுடன் செஞ்சுடரும்
மரகதமும் சாமளமும்
மனங்குளிரும் ஊதாவும்
வண்ணவித்தை இறைத்துவிடும்;
வஞ்சியரின் வாஞ்சைநகை
வைரத்தின் டால்வீசும்;
வாழ்க்கையதன் வார்ப்படத்தில்
உருவெய்தும் வடிவுபல! 31

கணக்கில்லாப் பலகோடி
வடிவத்தில் வஸ்துவினில்
கருமியைப்போல் ஒன்றினையே
தேர்ந்தெடுத்து அதற்குமட்டும்
வணக்கத்தைச் செலுத்துகின்ற
நெஞ்சகமும், அதற்கெனவே
வாடுகின்ற வாழ்வொன்றும்,
இன்னுமந்த ஒருநினைவு
பணிக்கின்ற விதமெல்லாம்
ஊடாடும் உள்ளுணர்வும்
பண்பாட்டுப் பரப்பினிலே
குறுகியவை ; அத்துடனே
கணிக்கவொண்ணு நித்யத்வப்
பெருவெளிக்கு எல்லையிட்டுக்
கல்லறையைக் கட்டுகின்ற
மதியினச் செயலாகும். 32

புறப்பொருளில் இருந்துமனம்
பேதமுறும் அம்சமிது !
புன்மைதனி நன்மைதனி ;
அறம்வேறு மறம்வேறு ;
சிறகடிக்கும் உவகைதனி ;
சிணுங்குகின்ற அழுகைதனி ;
சீர்மைதனி சிறுமைதனி ;
தூய்மையுடன் எந்நாளும்
இறந்துவிடா உரம்படைத்து
வழங்கிவரும் உண்மைதனி ;
இரத்தமின்றி வெளிறிப்போய்
பொலிவிழந்து உலவிவரும்
பிறிதுபல உண்மைதனி ;—
எனப்பிரித்துப் புடமிட்டால்
பின் அல்லற் குப்பையெல்லாம்
பூராவும் வெந்திடலாம். 33

இன்பத்தைக் காதலினைச்
சிந்தனையைத் துண்டுதுண்டாய்
இவ்விதம்நாம் பகுத்திட்டால்,
ஒவ்வோர்சிறு பாகமுமே
முன்பிருந்த முழுவதையும்
மிஞ்சிவிடும் ;—இன்னுமந்த
முழுமையிலே ஏதேனும்
பகிராது இருந்துவிடில்,
பின்னரதில் ஊதியமாய்ப்
பெறவல்ல இன்பங்கள்
பிறிததனில் பத்திரமாய்
ஒதுக்கவல்ல துயரங்கள்
என்னவென நாமறியோம் !
இவ்வுண்மை, மாற்சர்யம்
எத்தனையும் இல்லாத
நம்பிக்கைப் பொற்சுடரை 34

வானகத்துக் கவினனைத்தும்
கொஞ்சுகின்ற பூவுலகில்
வாழுகின்ற சிறுபொழுதும்
மறுபிறவி என்றொரு
கானகத்துப் பாழ்வெளியைப்
பண்படுத்தும் வீண்உழைப்பில்
காலமெலாம் செலவிட்டுப்
பிரத்தியட்ச மனிதர்களின்
ஊனுயிரை மாயமெனக்
கதைபேசி உலகத்தை
உருக்குலைந்து போனதொரு
தோட்டமென மதிக்கின்ற
ஞானிபலர் இழுத்துவெளிக்
கொண்டுவரும் ஒளிக்கிணறு ;
ஞாலத்தில் என்றென்றும்
கடைப்பிடிக்கும் கோட்பாடு. 35

கற்பனையின் மயனுலகில்
சஞ்சரிக்கும் பொழுதெல்லாம்
கண்டதுண்டு என்னுணர்வு
உன்னதத்தின் உருவமொன்றை!
பொற்கரத்தில் ஒளிக்கிண்ணம்
ஏந்திஉஷை எனுமங்கை
பொலிவுமழை பொழிகின்ற
யௌவனத்து வைகறையில்
கற்சுவரில் மந்திரம்போல்
ஒயில்வளரும் குன்றுகளில்
கதிர்ச்சுடரோன் முறுவலிக்கும்
மோகனமாம் புல்வெளியில்
அற்புதத்துக் கோட்டினிலே
காற்றைப்போல் தவழ்ந்துவரும்
அலைச்சுருளின் வளைவுகளில்
அமரர்துயில் குகைநடுவில் 36

கஞ்சமலர்ப் பாதத்தால்
புகைத்துகிலைப் பாவுகின்றாள்;
கற்பனையின் கடற்கரையில்
ஓர்குன்றின் சதுக்கத்தில்
செஞ்சிலம்பின் விஞ்சுமொலி
நாதத்தின் ஜாலவித்தை
செவிகளிலே புல்லரிக்கக்
கண்பறிக்கும் சொக்கழகு
மிஞ்சுகின்ற ஆடைகளை
அரவணைந்து காரிருளில்
மின்னலைப்போல் என்னையவள்
சந்தித்தாள் ஆதலினால்
நெஞ்சிழந்தேன் சொல்லரிய
அலங்காரச் சோபிதத்தில்!
நேத்திரங்கள் இரண்டிருந்தும்
அவளைநான் பார்க்கவில்லை!! 37

தனிமைகளில் தோப்புக்கள்
இரகசியமாய் உரையாடும்
தணிந்ததொனி உச்சரிப்பில்
அவள்குரலைக் கேட்டேன் நான் !
கனிவுமிகும் துயிலினிலே
அவைகளை அங் கமிழ்த்திவிட்ட
கனிமுத்தச் சுவைநினைவில்
முணுமுணுக்கும் உதடுகள்போல்
வனிதையைப் பற்றிமட்டும்
சுற்றிவரும் செய்திகளை
வாத்சல்யக் காற்றுக்குச்
சுவாசிக்கும் மலர்வகைகள்
மனிதர்களின் மனம்மயங்கக்
கொட்டுகின்ற வாசனையில்
மற்றுங்கு நீர்க்கரங்கள்
நாட்டுகின்ற ஊற்றுகளில் 38

வழக்கொழிந்த பழங்காலச்
செய்யுள்முறை வார்த்தைகளில்
வளர்காதல் நுரைதெறிக்கக்
கொப்பளிக்கும் கவிதைகளில்
பழுதுற்ற நிகழ்காலக்
குப்பையினால் நேற்றுடனே
பழமையிலே பதுங்கிவிட்ட
காலத்தைத் திணறடிக்கும்
சுழல்காற்றின் ஆர்ப்பரிப்பைச்
சற்றேனும் எதிர்த்துநின்று
சூறையதைத் தடுக்கவல்ல
சக்தியினில், சாரமின்றி
நழுவுகின்ற வாழ்க்கையிது
தியாகத்தின் தீக்கொழுந்து
நாச்சுழற்றும் பெருமிதத்தை
எட்டவைக்கும் தத்துவத்தில் 39

சாந்தமுடன் தவழ்ந்திடினும்
வேகமுடன் சுழன்றாலும்
சார்ந்துநிற்கும் வாயுவெளிச்
சலனங்கள் ஒவ்வொன்றில்
பூந்தளிரைக் கோதிவிட்டு
மயக்கத்தைக் கொட்டுகின்ற
புள்ளினங்கள் வாய்நிறையக்
கூவுகின்ற மதுரத்தில்
நீந்துகின்ற மேகங்கள்
ஒவ்வொன்றின் மழைச்சரத்தில்
நிச்சப்த அமைதியெலாம்
உலகத்து ஓசையெலாம்
ஏந்திழையின் உள்ளுணர்வே
உண்மைகளின் ஒற்றுமையாய்
இலங்கிற்று;—உருவத்தில்
வண்ணத்தில் சப்தத்தில். 40

○ ○ ○

கனவினிமை யௌவனத்து
அதிசயங்கள் பலசெறிந்து
கவின்கொஞ்சும் குகைகளிலே
அமிழ்ந்திருந்த நான்உடனே
அனல்தோகைப் பாதரட்சை
அணிந்தவன்போல் முன்பாய்ந்தேன்!
அஸ்தமனச் செம்பரிதி
வட்டமொரு விளக்கென்று
தனக்குள்ளே எண்ணியதால்
தலைகிறங்கிப் போனவிட்டில்
தணல்முறுவல் தகதகக்கும்
சிதையையதில் நாடுதல்போல்,
மனவானின் ஓராசைத்
துருவத்தை எட்டிடநான்
மசக்கையொளி தனிற்சுழலும்
சருகெனவே சிறகடித்தேன். 41

அழுதாலும் தொழுதாலும்
மனங்குழையா அவள்ஆனால்
அரியணையாய்க் கிரகமொன்றில்
அமர்ந்திருக்கும் தெய்வமென
நழுவிட்டாள் கண்முன்னே !–
நாச்சுழற்றும் தழற்சிறகு
நலிவுற்ற நம்வாழ்வின்
நிழலாட்டக் கேந்திரத்துள்
கொழுந்தடரப் பொறிகுலுக்கிப்
பதின்மடங்கு வேகத்தில்
கொடிவீசி உந்திற்று ;
தரித்திரத்தில் தனை உடனே
அழுத்துகின்ற மாபெரிய
நஷ்டமொன்றை உற்றதனால்
அலமந்து நிற்பவன்போல்,
இருவருக்கும் மத்தியிலே 42

கடப்பதற்கு இடையூறாய்ப்
பாலமில்லா அகழியெனக்
காட்சிக்குப் புலனாகாப்
பேயுருக்கள் காத்துநிற்கும்
சுடலைவெளி பரந்திருந்த
போதிலும்நான் தயக்கமின்றி
சூக்ஷ்மஉருப் பெற்றவன்போல்
அவளைப்பின் தொடர்ந்திருப்பேன் ;
தடையாக அப்பொழுதோர்
குரலெழுந்து கூறிற்று !
“ தாரணியின் பாதையெலாம்
சித்தத்தில் சிறிதளவும்
திடமின்றித் திரிபவனே !
நோக்கிடதோ நீவேட்கும்
தீங்கனவின் வனிதைஉரு
நின்னருகில் நிற்பதனை.” 43

உடனேநான் திடுக்கிட்டு
வினவிடுவேன் : "எங்கே ?"
உலகத்தின் எதிரொலிதான்
பதிலளிக்கும் : "எங்கே ?"
படமுடியாப் பரதவிப்பில்,
பயமுறுத்தும் மௌனத்தில்,
பாசத்தால் கதறுகின்ற
என் துயரக் கோபுரத்தே
நடமாடித் தங்கிவரும்
பேச்சில்லாக் காற்றுகளை
நான்கேட்பேன் ஒவ்வொன்றாய் :
"உங்களிலே யாரேனும்
கடந்தீரா எங்கேனும்
ஆன்மாவின் ஆன்மாவாய்க்
கனவுவலை நான்புனைந்த
காரிகையை வரும்வழியில் ?" 44

மந்திரங்கள் முணுமுணுத்தேன் ;
விளக்கவொண்ணாப் புதிராக
மறைந்திருந்து நம்விதியை
நிர்ணயிக்கும் சூத்திரத்துத்
தந்திரத்தை இயக்குவிக்கும்
கண்ணில்லாக் கொடுங்கோலர்
தம்மீது ஆட்சியுள்ள
பலபெயரை இதழ்பிரித்தேன் ;
மந்திரத்தால் துதித்திடினும்
பாசுரத்தால் தோத்தரித்தும்,
மங்கையளை விழுங்கிவிட்ட
கங்குல்நிசி கலையவில்லை !
எந்தவொரு உலகத்தின்
தெய்வீகப் பிழம்பென்றே
எண்ணங்கள் அவளுருவை
வழிபட்டு வணங்கினவோ 45

அதனையுமே 'நான்' 'எனது'
என்ற இரு பேதமருள்
அகங்கார மமகாரம்
மலிந்திருக்கும் பெருங்குழப்பம்
இதனுள்ளே படைப்பழிக்க
இயலவில்லை; ஆகையினால்,
இதயத்தில் அச்சமுடன்
நம்பிக்கை கூத்தாட
எதிர்பார்ப்பின் சுவாசத்தால்
பாதையிலே தென்புற்று
ஏகிவிட்டேன் நம்வாழ்வின்
குளிர்நடுங்கும் காட்டூடே!
விதிர்விதிர்த்தேன் எதிருற்ற
புதுப்புதுவாம் வடிவுகளால்!
விழுந்தெழுந்து அவசரத்தில்
பலமின்றித் தடுமாறி 46

தங்கத்துளி இடமின்றிக்
காய்கின்ற கானகத்தில்
தழைத்திருக்கும் தவறுகளின்
முட்பரப்பைச் செகுத்தெறிய
அங்கங்கே பலனின்றிப்
போராடி முன்சென்றேன்!
"அனுபவத்து விஷவாடை
படியாத அவர்களிடை
எங்கேனும் அவள்சாயல்
பெற்றிருக்கும் ஓர்வடிவம்
எதிர்ப்படுமோ? என்காதற்
கண்களிலே தப்பிவிட்
மங்கையவள் முகமூடி
தரித்ததுபோல் ஒருருவில்
மறைந்திருக்க மாட்டாளா?"
என்றெண்ணித் தேடினன்நான். 47

தென்பட்டாள் அப்பொழுது
ஓர்மடந்தை! அவளுடைய
தேமதுரக் குரலொலியில்
நஞ்சினிமை தோய்ந்திருக்கும்;
நின்மலமாம் நீலநிற
ஆகாயச் சோலையின்கீழ்
நீரோடைக் கரையொன்றில்
வீற்றிருந்தாள் இவ்வனிதை;
கன்னியவள் பொய்வாயின்
மூச்சினிலோர் மென்சுகந்தம்
கமழ்ந்துவரும்,-உள்ளத்தை
மயக்குகின்ற லாகிரியாய்;
மின்சாரத் தீண்டுதல்போல்
விஷமேற்றும் அவள்ஸ்பரிசம்;
மின்வெட்டும் பார்வைகளில்
உன்மத்தம் ஒளிஉமிழும்; 48

செருக்குடனே பூரிக்கும்
கனிவண்ணக் கன்னத்தில்
சேயிழையாள் மிடுக்கினிலே
விம்முகின்ற நெஞ்சகத்தில்
இருந்துஒரு நாசூக்காம்
விஷவாடை பறந்துவரும்;
ஈட்டியைப்போல் ஊடுருவி
வைகறையின் பனித்துளிபோல்
இருதயத்துப் பசும்பரப்பின்
கேந்திரத்துள் புகுந்ததனின்
இலைப்பரப்பில் தேங்கிவிடும்;
இளமையிலே நரைகண்ட
புருவம்போல் அவைகளெலாம்
பிஞ்சினிலே பழுப்பேறி
பூக்காது கனிபழுத்துக்
கருகிவிழும் வரையிலுமே! 49

பலப்பலவாம் மனிதர்களின்
வடிவத்தில் தீவிரமாய்ப்
பார்வையிலே பசியுடனே
நாடிவிட்டேன்! சிந்தனையில்
கொலுஅமர்ந்து கொண்டிருக்கும்
விக்ரகத்தின் சாயலைநான்
கோடியிலே ஒருவரிலும்
காணாது தளர்வுற்றேன்;
சிலரிடத்தில் எழில்மின்னும்;
என்றாலும் அழகுவெகு
சீக்கிரத்தில் செத்தகலும்!
இதரர்கள் அனுபவத்தால்
உலகியலின் ஞானத்தைப்
பெற்றவர்கள்; என்றாலும்
உதட்டளவில் தித்திக்கும்
வார்த்தையெலாம் வஞ்சகமே! 50

சத்தியமாய் நடந்துகொண்டாள்
ஒருத்திமட்டும்; அந்தோ! நான்
சலிப்புற்றேன்! ஏன்தானோ
அவளுமென்னை எய்த்திட்டாள்?
எத்திசையும் தப்பிஓட
மார்க்கமில்லா மானொன்று
இறுதியிலே வேடுவனை
எதிர்த்துநிற்கத் துணிவதுபோல்,
சித்தத்தின் முடுக்கத்தைச்
சென்றடைந்து நான்நின்றேன்;—
சீவனெலாம் ஒடுங்கிவரக்
காயமுற்று மூச்சிரைக்க.
எத்தனையும் பலனில்லா
என்சமரைக் கண்ணுற்று
இரக்கத்தால் குளிர்மிகுந்த
நாளதுவும் வெடவெடக்கும் 51

நண்பகலின் உதயம்போல்
அப்பொழுது மறுபடியும்
நகைசிந்தும் மீட்சியதே!
நெடுநாளாய்க் கனவுகளின்
வண்ணத்தால் உருக்கொடுத்த
வடிவழகைப் போன்றேஎன்
வழியிலொரு திருவுருவம்
நின்றிருக்கக் கண்டேன்நான்.
எண்ணத்தில் தித்தித்த
எழிலமுதின் பெண்மைஉரு!
என்றென்றும் அழிவின்றிக்
காய்கின்ற கதிரவனில்
தண்ணிலவின் மாறுதல்கள்
எப்பொழுதும் சங்கமிக்கும்
தன்மையைப்போல் இதயத்தில்
ஒன்றுகின்ற அன்பரசி! 52

சீதளத்துக் கதிர்முறுவல்
சிலிர்க்கின்ற சந்திரிகை!
சிருங்காரத் தீவுகளின்
வானகத்து மகராணி!
பூதலத்துப் பொருளிலெலாம்
பார்வையினால் தங்கமுலாம்
பூசுகின்ற ரசவாதம்
பயின்றிருக்கும் மந்திரப்பெண்!
மாதரசி வானகத்தே
சஞ்சரிக்கும் சுடர்க்கோவில்!
மாறுதல்கள் உற்றிடினும்
அடிப்படையில் ஒன்றேயாய்
வேதத்தின் கருப்பொருள்போல்
விளங்குகின்ற மெல்லியலாள்!
வெளிச்சத்தை உதவிடினும்
உஷ்ணமில்லாத் தணற்தண்மை! 53

காதலுளம் கசிந்துருக
வாலிபமும் வடிவழகும்
கற்புநெறி கொஞ்சுகின்ற
நிலவுணர்வின் சுவர்ணலதை!
மேதினியில் இறங்குகின்ற
இருட்திரையும் தன்னுடைய
மேனிஉறும் இரவுநிறம்
எனவானம் அறியாது
பாதுகாக்கப் பரிதிவட்டம்
மறைந்ததுமே நிலவேறிப்
பாலொளியைப் பாய்ச்சுதல்போல்,
அவளென்னை அரவணைந்து
ஏதுமொரு இருட்பிளவும்
இல்லாது சோபைதந்தாள்;-
என்மனத்தில் அமைதிகொஞ்சும்
விண்ணிருந்து பூமிவரை! 54

காற்றடிக்கும் போக்கினிலே
நகருமொரு முகிலைப்போல்
கன்னியவள் கருணையினால்
கானகத்துப் பிராந்தியத்தில்
ஏற்றென்னை முன்னேக
ஓர்குகைக்குள் பின்தொடர்ந்தேன்;
எழிலணங்கு என்னருகில்
பரிவுமுகம் குனிந்திருக்க
கீற்றுடலாய்த் தேய்வுற்றுப்
பூர்ணிமையாய்ப் பின்வளர்ந்து
கிறுகிறுக்கும் இன்பநிலா
பொழிகின்ற மதியம்போல்
வீற்றிருந்து என் துயில்கள்
விளக்கமுறச் செய்வித்தாள்;
விழுங்கிற்று உடல்உணர்வு
இரண்டையுமே ஓர்உறக்கம்! 55

கடற்பரப்பில் நீந்துகின்ற
குளிர்நிலவின் பிம்பமெனக்
காரிகையாள் சிரிப்பாளோ
சிணுங்குவளோ அதைப்போல
உடல்வண்ணம் உயிர்த்துடிப்பு
உணர்வலைகள் யாவையுமே
உயர்ந்தெழுந்து சுடர்வீசும்!
ஒடுங்கிவிழும் ஒளிமழுங்கி!
மடந்தையவள் பக்கத்தில்
அமர்ந்திருக்க நான் அங்கே
மயனுலகின் கந்தர்வக்
காதல்நெறிப் படுக்கையொன்றில்
கிடந்திட்டேன் இறப்பிற்கும்
உயிர்ப்புக்கும் இடைவெளியில்!
கிணுகிணுக்கும் வெள்ளிக்குரல்
வாய்த்தஅவள் கூப்பிடுமுன் 56

மரணமுடன் வாழ்க்கையுமே
தங்களது சச்சரவை
மறந்துவிட்டுத் திக்கற்ற
தாயொருத்தி இருதயத்தின்
நிரந்தரமாம் துயரத்தில்
நம்பிக்கை கொழுந்தாடும்
நிழல்வட்டம் என்றுஒரு
சோதரனும் சோதரியும்
இரட்டையராய் உதித்தமைபோல்
ஓடிவரும்; குகையூடே
"இவன்நமது வம்சத்தில்
ஒருவனல்ல; இங்கிருந்து
துரத்திவிடு", எனக்கூவிச்
சிறகின்றிப் பறந்துலவும்;
துடிதுடித்து வீறிட்டேன்!
கனவெனினும் கலுழ்கின்றேன்!! 57

பின்னரெந்தன் துயிற்கடலில்
எவ்விதமாம் சூறைகள்
பிரளயமாய் ஆர்ப்பரித்து,
வெளிருகின்ற தேய்பிறையின்
தென்பிழந்த உதடுகளில்
சோகைமுதிர் சுருக்கத்தைத்
தீய்க்கின்ற கிரகணம்போல்
மதியத்தை மறைத்தனவோ ?
என் ஆன்மா கலங்கரையே
இல்லாத சமுத்திரமாய்
எவ்விதமாய் ஆயிற்று ?
ஏதங்கு புயலுறுமல் ?
கன்னியவள் அந்நேரக்
கிரகமடந்தை தணிந்தவுடன்
கரையிருந்து கரைவரையில்
அலைமோதும் என் ஜீவன் 58

கடுகளவும் அசைவில்லாக்
குளிர்மரணம் உறுதற்குக்
காரணமாய் அதைப்போர்த்த
பனிப்பாறை எதுவோ ? பின்
வெடித்ததுவே இருதுண்டாய்
இளகிவிட வெண்ணிலவு
வேடிக்கை பார்த்துமிக
ஏளனமாய் நகைபூக்கும்
படிக்கங்கு சதிசேர்த்த
பூகம்பம் எது ? - இவற்றை
பாட்டிழையில் வார்த்தைகளால்
பாவிவிட்டேன் மறைமுகமாய் ;
துடிக்கும்சொல் ஒவ்வொன்றும்
கண்ணீரின் புதிர்விடையே !
துயரத்தால் நெஞ்சுவிம்ம
என்பொருட்டு தேம்பாதே !! 59

கடைசியிலக் கண்காணாக்
கானகத்தில் தோன்றிற்று
கற்பனையில் கடைந்தெடுத்த
கன்னிஉரு ஆதரிசம்!
நடைதளர்ந்து நாவறண்டு
இடறிவிழும் எல்லைக்கு
நாடிவிட்டேன் முன்பதனை
ஏக்கத்தில் தாபத்தில்;
அடைதற்கு ஒண்ணாது
அலுப்படைந்து குகைக்குள்ளே
அயர்ந்திருக்கும் போதில்தான்
அவள்வந்தாள் அருள்பூண்டு;
அடர்ந்திருந்த முட்காட்டின்
குளிர்வெளியில் ஆரணங்கின்
அசைவினிலே உதயத்தின்
ஒளிச்சாட்டை சொடுக்கிற்று! 60

அவளுடைய தோற்றத்தில்
வாழ்க்கையதன் குதுகுதுப்பு
அலைஅலையாய்ப் பிரவகிக்க,
இலையுதிர்ந்து காய்ந்திருக்கும்
கவடுகளில் தளிர்தழைக்கும்;
வறண்டதரை வளப்பமுறும்;
காதலினால் பூமிதனில்
வானுலகைக் கொணர்ந்திடுவாள்!
துவளுகின்ற இடைஒயிலே
ஜீவிதம்தான் ஆகையினால்
துல்லியமாய் மொட்டவிழும்
மென்காதல் நினைவுகள்போல்
பவனியவள் போகின்ற
பாதையெலாம் மலர்த்தரையாய்ப்
பாவிஅதன் மீதினிலே
பூக்கூரை வேய்ந்திருக்கும்! 61

எத்திக்கும் ஒளியைப்போல்
விரைவாகப் பரவிவிடும்
ஏந்திழையாள் சுவாசிப்பில்
மூளுமொரு இன்பஇசை;
தித்தித்துத் தேன்தேங்கும்
சிற்றெலியின் சுவைஉணர்வு
தீண்டுவதால் ஊடுருவப்
பட்டாங்கு மண்டியுள்ள
சத்தங்கள் ஓசையெலாம்
சட்டென்று ஓய்ந்துவிடும்;
சலனமின்றி வாய்புதைத்து
நின்றுவிடும் பேய்க்காற்று;
புத்திளமை வாசனைகள்
உகந்ததொரு உஷ்ணமுடன்
பூவையளின் கூந்தலினில்
இருந்தங்கே உதிர்ந்தந்த 62

இதமுற்ற காற்றினிலே
குளிர்த்திரளைக் கரைத்துவிடும்;
இன்பஒளி காதலுரு
எய்துகின்ற போதினிலே
கதிர்ப்பொலிவு தகிப்பகலும்
சூரியனின் உருவகம்போல்
கனிவுடனே லட்சியத்தின்
மாட்சிஉரு இவ்வொன்று
மிதந்தங்கே நான்கிடந்த
குகையினுக்குள் வந்தவுடன்
மிருதுவான குரலாலென்
ஆவியினைக் கூப்பிடவும்
புதைந்திருந்து கனவுநெய்த
மெய்ப்பாட்டால் சுவப்பனத்தின்
புல்லரிப்பில் அமிழ்ந்திருந்த
மண்யாக்கை எழுந்தமரும்! 63

புகைநடுவில் தீயைப்போல்
இன்னுமவள் சொல்லவொண்ணாப்
புத்தழகின் மினுமினுப்பில்
நெஞ்சிழந்து நான்நின்றேன் !
முகையவிழும் மலரெனத்தான்
கூம்புகின்ற இருள்மொட்டு
முறுவலித்து இதழ்விரியும்
வைகறையின் விம்மிதமே
நகைகொட்டும் மடைஒளியால்
என்னுயிர்ப்பில் உட்கலக்க
நகமிருந்து சிரம்வரையில்
ஊடுருவும் உணர்வுற்றேன் !
வெகுநாளாய்ப் பல்லாண்டாய்
எனதாசை நோக்கிருந்து
வெட்கத்தால் மறைந்திருந்த
திவ்யஉரு ! என்எமிலி !! 64

○ ○ ○

சிந்தனையின் மலர்க்கொடியில்
அரும்புவிட்டு நின்னுடைய
சிரிக்கின்ற பொன்முகத்தின்
பரிவாசைக் கண்ணிரண்டும்
விந்தைவிழி சுழற்றுகின்ற
வித்தகத்தில் மடலவிழ்ந்து
விளங்குமிந்தப் பூக்களைநீ
திரஸ்காரம் புரிகுவயோ ?
வெந்துதிர்ந்து மாலையுடன்
இறந்துவிடும் பிறப்பெனினும்
வேட்கையதன் உயர்நிலையில்
என்நெஞ்சம் அலர்ந்தகுறி !
சுந்தரஞ்சேர் உன்நயனக்
கதிரொளியைப் பாய்ச்சிவிடில்
சுவர்க்கத்துத் தருக்களெனக்
கனிஈட்டம் தந்துவிடும். 65

காதலியே நாம்போவோம்!
காலமின்று கனிந்துளது ;-
கர்வத்தின் அகக்குமிழி
'என'தென்ப துடைந்ததனல்!
மாதரசே புறப்படுவாய்!
மறுக்காதே; மலைக்காதே!
மணப்பெண்போல் மகிழ்வுற்று
மகிழ்ச்சியினைத் தருவளென்ச்
சாதலில்லா சாயுஜ்யம்!
உத்வேக ஒன்றிப்பு!
சமுத்திரம்போல் ஆழமுண்டு;
விரிவானின் உணர்வகலம்;
ஏதுமினி 'என' தில்லை!
எல்லாமே நான்ஆனேன்!
எதனுள்ளும் நானேதான்;
எல்லாமும் எனக்குள்ளே! 66

நேரமிதோ உற்றிடுத்து;
இதுவேநம் சின்னமென
நியமித்த தாரகையும்
ஆகாயப் பாதையிலே
தாரணிக்கு ஒளியளிக்கும்
யாத்திரையில் கிளம்பிடுத்து;
தனிமைஒரு சூனியமாம்
சிறைமீது தண்முறுவல்!
பாரதனின் வெளிச்சத்தில் ;-
மதில்களெலாம் மிகஉயரம்!
பலம்வாய்த்த கதவுபல;
பாராவும் மிகக்கடுமை!
தாரகமாம் காதலுரம்
இதற்கெல்லாம் பணியாது;
தடைப்படுத்தி அடக்கிவிட
யாராலும் இயன்றதில்லை. 67

தன்னையொரு இருள்மொட்டில்
குமைக்கின்ற சூழ்ச்சியினைத்
தடுப்பதற்கு அண்டத்தை
ஊடுருவி வெட்டுகின்ற
மின்னலைப்போல் கண்காணா
அதிர்ச்சியுடன் சிறையிருந்து
மீளுகின்ற முயற்சியிலே
வேலிகளைத் தாண்டிவிடும்;
தன்போக்கில் சுவதந்திரமாய்
வானகத்தின் சுவாசமெனத்
தவழ்ந்துவரும் காற்றையுன்றன்
கைப்பிடிக்குள் தேக்குவயோ?
பொன்பாவாய்!–அதைநிகர்க்கப்
பிடிபடாத பொருள்காதல்;
புரவியெனச் சிந்தனையின்
மீதேறித் தன்வழியில் 68

நிலைத்திருக்கும் கோவில்கள்
நிமிர்ந்திருக்கும் கும்பங்கள்
நிழல்பரப்பும் உயர்தருக்கள்
நீளவரி ராணுவங்கள்
கலைத்தேவி சூடுகின்ற
காப்பியத்து நறுமலர்கள்
கணக்கில்லாச் சிற்பத்துக்
களஞ்சியங்கள் அனைத்திலுமே
கொலைத்தொழிலின் கைரேகை
கொடுங்காலன் பதித்தல்போல்
கோலஎழிற் கரக்கோட்டைக்
கொஞ்சவிடும் மெய்க்காதல்!
பலத்தாலோ கூற்றுவனில்
பன்மடங்கு சிறந்ததிது;
பாதாளப் பேயிருளில்
சங்கிலியால் கட்டுண்டு 69

வலிமிஞ்சித் துடிதுடித்து
வதையுழலும் தசைகளுடன்
வதக்குகின்ற துயரத்தால்
வெதும்புகின்ற இருதயமும்
கலிவளர்ந்து மலையுயரம்
பொய்ப்பொறுப்பும் நிபந்தனையும்
கவிந்திருக்கும் குப்பைக்கீழ்
காடாந்த காரத்தில்
பலிகொடுக்கப் பட்டுவிட்ட
பண்புகளின் மத்தியிலே
பட்டினியில் குமைகின்ற
பதனழிந்த ஆன்மாவும்
நலிவகன்று விடுதலையின்
சுவைக்காற்றை உட்பருகி
நரகத்தில் மீண்டுவர
வழிஉதவும் சஞ்சீவி!! 70

○ ○ ○

காதலியே! துறைமுகத்தில்
கப்பலொன்று காத்துளது!
கலங்கரையாய்த் தொலைதூரத்
தீபமொன்று அழைக்கிறது;
மோதுகின்ற அலைகடலின்
நீலநிற நீர்ப்பரப்பில்
மோகனமாய் ஓர்பாதை
நமக்கெனவே ஒலிக்கிறது!
மாதரசே! அன்புடனே
மரக்கலத்தை அரவணைக்க
மலைச்சாரல் தனிலிருந்து
மாருதமும் கரம்வீசும்;
கீதத்தின் நாதத்தைப்
புள்ளினங்கள் அதிற்கலக்கும்!
கிறுகிறுக்கும் மகுடியிசை
கேட்டவொரு நாகம்போல் 71

கொந்தளிக்கும் சமுத்திரமும்
தந்திரத்துச் சூழ்ச்சிகளைக்
கொஞ்சமுமே காட்டாது
ரஞ்சிதமாய்ப் பிரவகிக்கும்;
சுந்தரியே நம்முடைய
மாலுமிகள் சோர்வின்றிச்
சுறுசுறுப்பாய் நிமிர்ந்திட்டார்;
சுக்கானைப் பிடித்திட்டார்;
அந்தரத்து வீதியிலே
ஆகாயப் பூம்பொழிலில்
ஆனந்தச் சுவர்க்கத்தை
அடைந்திடவே பறப்பதுபோல்
இந்தஒரு கப்பலிலே
இன்பமுடன் நாம்மிதப்போம்!
இப்பொழுது சொல்! கேட்பேன்;
என்னுடனே வருவாயா? 72

இரவும்பின் பகற்பொழுதும்
புயலும்பின் அமைதியுமே
இணைபிரியா தொன்றையொன்று
பின்பற்றிப் பின்தொடர
மரகதத்துத் தீவென்னும்
மனிதர்களின் கால்படாத
மாசில்லாக் கன்னிநிலம்
நாம்போகும் இடமாகும்;
விரிநிலவு சிலிர்க்கின்ற
வானத்துத் திரைக்கீழே
விதவிதமாய்க் கணமொன்றாய்
மாறுகின்ற ஒளிஒலிகள்!
சிரிக்கின்ற நுரைச்சிகரம்
கரையோரப் பால்மணலை
சிலிர்ப்புறவே முத்தமிடும்
சிருங்காரப் பெருக்குண்டு. 73

ஓர்பறவை நம்தோணி ;
அதன்கூடு இச்சுவர்க்கம் !
ஒயிலாகச் சஞ்சரிக்கும்
காற்றுக்குள் கரையோரம்
பார்த்திருந்தால் பசியகலும்
பண்புடனே நெளிவழகில்
பண்ணிசைத்து நடனமிடும் ;
அலைகளுடன் அசைந்தாடும்.
நீர்ஓடை ஊற்றுக்கள்
ஏரிகுளம் சுனைகள்பல
நின்மலமாம் வைரம்போல்
துல்லியமாய்த் துலங்குதடீ !
காரிருளைக் கரைக்கின்ற
வைகறையின் மோனமுடன்
ககனவெளி சுமக்கின்ற
கின்னரத்தின் இன்னிசைகள் ! 74

கண்ணிமையில் தூக்கம்போல்
கனக்கின்ற சுகந்தங்கள் ;
கண்காணாத் தாரைகள்போல்
நழுவுகின்ற பனிப்படலம் ;
வண்ணமலர்க் கொடிகள்பல
வகைவகையாய் அத்தீவின்
வனஎழிலை அலங்கரிக்கும்
வளப்பமுள்ள மணிமகுடம் ;
கிண்ணம்போல் இதழ்க்குழிவு ;
பங்கயமும் சம்பகமும்
கிறக்கமுறும் படிக்கேயோர்
அம்பின்முனை ஊடுருவும்
தண்மணத்தைத் தொடுப்பதனால்
தித்திக்கும் வேதனையில்
தலைசுழன்று வீழுகின்ற
வரையிலுமே வில்வளைக்கும் ! 75

வீணையிசைப் பாட்டொலியும்
 விரல்நுனியின் துடிப்புமென,
விம்முகின்ற அழகுணர்வும்
 வித்தாரக் கவிதையும்போல்,
தோணியினை நாம்செலுத்தும்
 தீவினிலே,-ஏந்திழையே!
தொனியாவும் ஒளியெல்லாம்
 சேதனங்கள் ஒவ்வொன்றும்
நாணத்துக் கன்னிமனக்
 கனவொன்றின் எதிரொலிபோல்
நாற்புறமும் வையத்துச்
 சுழற்சியிலே நித்தநித்தம்
மூண்டுஎழும் இசையோடு
 ஆன்மாவின் ஆன்மாவாய்
முரண்பாடு ஏதுமின்றி
 லயங்கொஞ்சச் சங்கமிக்கும். 76

காற்றுக்கும் கடலுக்கும்
 விண்ணுக்கும் பூமிக்கும்
கயிறுகட்டித் தொங்கவிட்ட
 தொட்டில்போல் இத்தீவு!
மாற்றறியாப் பசும்பொன்னின்
 மஞ்சள்நிறத் துகள்கள்தாம்
மண்ணினிலே கலந்திருக்கும்
 பாக்கியத்தைப் பெற்றுளது;
சோற்றுக்குப் பஞ்சமில்லை;
 பிணியில்லை; ஊஹூஹூம்!
சோதரர்க்குள் கிடையாது
 போரென்னும் பூகம்பம்;
சேற்றினிலே உழல்கின்றோர்
 காட்சிக்கும் எட்டாத
சிகரமிதில் புன்மையெதும்
 சிறகடித்து வருமோடி? 77

இடிமுழக்கம் எச்சரித்து
　　மற்றுமுள நாடுகட்கு
ஏகிடவே விரைகின்ற
　　இறகுபெற்ற புயல்களெலாம்,—
துடியிடையே!—நம்தீவில்
　　ஆன்மாவைச் சாந்தியிலே
தோய்த்தெடுக்கும் தென்றலினைத்
　　தவழவிடும்; அல்லவெனில்
படிப்படியாய்ப் பனிச்சரத்தில்
　　கண்ணீராய்க் கரைந்துவிழும்;
பாய்ந்தோடும் அப்பெருக்கில்
　　கானகமும் பசுவயலும்
விடிவெள்ளி முளைத்தவுடன்
　　விரிகின்ற மொட்டைப்போல்
வித்தாரச் சிரஞ்சீவிப்
　　புத்தெழிலைப் போர்த்துவிடும்! 78

வானத்துத் தளத்திருந்து,
　　கடற்பரப்பின் மேலிருந்து,
வாசனைகள் இடையிடையே
　　உதிர்ந்துவிழும்; உயர்ந்தோங்கும்!
தேனலைகள் தெளிக்கின்ற
　　திரைக்கடலின் முத்தாரம்!
தென்றலிலே தெறிக்கின்ற
　　விண்மீனின் பூக்கொத்து!
மேன்மேலும் ஒவ்வொன்றாய்த்
　　திரைகளையே கழற்றிவிட
மெல்லியளோர் மணமடந்தை
　　தன்னுடைய பருவத்து
மேனியதன் செழுமையிலே
　　புல்லரித்து வெட்குதல்போல்
மேன்மையுள்ள நம்தீவின்
　　வதனத்தில் செவ்வரிகள். 79

என்றாலும் குடத்துள்ளே
ஏற்றிவைத்த தீபம்போல்
எத்தனையும் மாண்பினிலே
குறையாத ஓர் ஆன்மா
தொன்றுதொட்டு இத்தீவின்
இதயத்துள் சுடர்கிறது!
தோற்றத்தில் புலனாகும்
புறப்பொருள்கள் அனைத்திலுமே
ஒன்றுவிடா திவ்வான்மா
உறைகிறது; இளவெயிலில்
ஒளிர்குன்று நீலஅலை
பசுந்தோப்பு இவற்றிலெலாம் —
அன்றிலினை வெல்பவளே!—
கண்வீச்சில் சிக்காது
அனுபவத்தால் உணரவல்ல
அகண்டத்தின் அணுவொன்று. 80

இத்தனையாம் அதிசயங்கள்;
ஆனாலோ அவற்றுள்ளே
இணையின்றித் துலங்குவதோ
தனியான ஓரில்லம்!
இத்தரையில் சத்தியமே
உலவிவரப் பாதகங்கள்
இன்னுமெங்கும் பிறந்திராத
காலத்தில் பூமடந்தை
நித்திரையில் சொப்பனத்தில்
உருப்பெற்ற சித்திரம்போல்,
நித்திலமும் ரத்தினமும்
கல்லெடுத்துக் கடல்வேந்தன்
எத்திசையும் எளிதன்மை
திகழ்ந்திருந்த அந்நாளில்
எல்லோரும் மலைப்புறவே
நிர்மித்து வைத்தனனோ? 81

காலரதம் வெகுவாக
ஓடிவிட்ட காரணத்தால்
கட்டிடத்தில் இன்றுஅந்த
மிடுக்கழகு முழுதில்லை;
நாலுபுறச் சுவர்களிலும்
தங்கத்தின் குழம்பினிலே
நற்பவழத் துகள்கலந்து
வரைந்திருந்த கற்பனைகள்
மேலெல்லாம் அடுக்கடுக்காய்
மண்டியுள்ள நீர்ப்பாசி ;—
மேகத்தின் இருட்போர்வை
மதியின்மேல் விரிதல்போல்!
காலுமணித் தீபங்கள்
அணைந்துவிடக் கூடத்தில்
கங்குலதன் அரசாட்சி;
மேல்முகட்டில் படர்கொடிகள். 82

கானகத்தை நேர்நோக்கி
நிமிர்ந்துநின்ற போதினிலும்,—
காரிகையே!—முற்றுகைக்கோர்
பலக்கோட்டை அல்லஇது!
வானத்தின் கீழிந்தத்
தரைமீது வாழுகையில்
வாஞ்சையிலே தென்புண்டு;
வடிவழகே அதுபோதும்
கானகத்துச் சூழ்நிலையின்
காம்பீர்யம் இல்லத்தில்;
கனிகிழங்கு; புள்விலங்கு;
கதிரவனின் புன்னகையும்,
தேன்நிலவின் ஒளித்திடரும்,
மின்மினிதம் அணுத்துகளும்,
தெய்வீகக் கோலமிடும்
நம்மனையின் முற்றத்தில் 83

ஆசையுடன் அருகருகே
படுத்திருந்து பொங்கியெழும்
ஆர்வத்தால் கரம்கோர்த்துச்
சமுத்திரமும் நிலப்பரப்பும்
வீசுகின்ற தென்றலிலே
சேதிபல சேர்த்தனுப்பி
விம்மூகின்ற இதயத்தின்
துடி துடிப்பில் துயிலழுந்தி
வாசமிகும் மலர்வகைகள்
முகிற்கூட்டம் நந்தவனம்
வட்டநகை பூக்கின்ற
வானமதி கரைமீதில்
ஓசையுடன் மோதுகின்ற
அலையிவற்றில் நாமுணர்ந்து
உண்மையெனப் பெயர்சூட்டும்
கனவுகளைப் புனைந்திடுவோம்! 84

○ ○ ○

இத்தீவும் வீடிதுவும்
என்னுடைய சொத்துக்கள்!
இங்குன்னைத் தனிமைக்கு
இனிமைதரும் நாயகியாய்
வைத்திடநான் துணிந்திட்டேன்!
பொழுதினைநீ பொன்னாக்க
வையம் விளக்கவரும்
கவிதைகதை இலக்கியத்துப்
புத்தகங்கள் பற்பலவும்
சேகரித்து அனுப்பியுள்ளேன்;
பொற்புடையோய்! இவற்றாலே
உணர்ச்சிகளில் நீந்திடுவோர் –
செத்துவிட்ட நேற்றைஅதன்
கல்லறையின் குழியிருந்தும்
செனிக்காத நாளையையோ
கர்ப்பத்துத் தலமிருந்தும் 85

அழைத்துவந்து இன்றென்னும்
நிகழ்கால நிலைப்படியில்
அமரத்வக் கம்பளத்தின்
மடிப்புகளுள் காலத்தின்
மழைச்சாரல் தெளிக்கின்ற
குளிர்காற்றில் தப்பிவிட,
மரணமில்லாத் துயிலினிலே
அமிழ்ந்திருக்கும் நினைவினிலும்
குழைகொட்டும் நெஞ்சத்தின்
கேளிக்கை மகிழ்ச்சியிலும் –
குமிழியிட்டுப் பரவசமாய்ச்
சஞ்சரிக்க விட்டிடுவார்!
இழைகின்ற இங்கிதமே!
நம்வாழ்வுப் பட்டியலில்
இடமில்லை வீணை
நாகரிகத் தேவைகட்கு. 86

பேச்சுக்குப் பொருளில்லாப்
பேரின்பப் பரவசத்தில்
பிரேமையுளம் லயித்துவிடும்
வரையில்நாம் பேசிடுவோம்!
ஆச்சர்யப் புல்லரிப்பில்
மூழ்கிவிட்ட வார்த்தைகள்
அமைதியிலே நேத்திரத்துப்
பார்வைகளில் உயிர்ப்பெய்தும்;
மூச்சுக்கள் கலந்துலவ
அரவணைப்பில் சங்கமிப்போம்!
முகிழ்ந்திருக்கும் நம்மிருவர்
அதரங்கள் தமக்கிடையே
தீச்சுடராய்க் கனல்கின்ற
ஆன்மாவை ஒளித்துவிட்டுத்
தீஞ்சுவையைப் பருகிவிடும்;
நரம்புகளும் நாடிகளும் 87

ஆர்வத்தால் பிணைப்புண்டு
ஒன்ருகப் படபடக்கும்;
அகத்துள்ளே பாசத்தின்
அந்தரங்கக் கேணிகளில்
நீரோடும் தாபங்கள்,—
உதயத்தில் மலைச்சுனைகள்
நின்மலமாய் ஒளிர்வதுபோல்—
பொன்ரேக்கைப் பெற்றுவிடும்!
ஈருடலில் இயங்குகின்ற
ஒருயிராய் ஒன்றிடுவோம்!
இல்லையில்லை! இருஉடலா?
சொன்னதெவர்? காதலெனும்
ஒருணர்வே ஊடாடும்
ஒருஜோடி இதயங்கள்
ஓசைஒலி ஸ்பரிசத்தால்
நிறைவெய்தும் அத்துவிதம். 88

ஓராசை நம்பிக்கை
இருசித்தச் சேதனத்தில்!
ஒருசித்தச் சங்கல்பம்
இருமனத்தின் நிழற்கீழே!
ஓர்வாழ்க்கை! ஓர்மரணம்!
ஓர்சுவர்க்கம்! ஓர்நரகம்!
ஓரழிவு உற்கைபோல்!
சாஸ்வதமும் ஒன்றேதான்!
பார்வைக்கும் எட்டாத
பிரேமையதன் விசும்பிடையே
பறந்துவரத் தேர்ந்தெடுத்த
சொற்களெலாம் ஈயத்தால்
வார்த்துள்ள தளைகளடீ!
ஐயோநான் என்செய்வேன்?
வாடுகிறேன்; கேவுகிறேன்;
சாகின்றேன்; வீழ்ந்திட்டேன்!! 89

பலம்வாய்த்த கவிதைகளே !
போயுங்கள் மன்னவனின்
பார்வையின்முன் தலைநிமிர்ந்து
செப்பிடுவீர் இவ்வுரையை :
“உலகத்துச் சந்தையிலே
விலைபேசி வாங்கியுள்ள
உங்களது அடிமைகட்கு
உண்மையிலே யாம்தலைவர் !
உலகத்தோர் காதலுக்கு
இடுகின்ற விலங்குகளின்
உறுத்தல்களும் தித்திக்கும் ;
அவையேதாம் வெகுமதியும் !
சிலவாஞ்சைக் கனவுடனே
செத்துவிட்ட வாத்சல்யம்
சிரஞ்சீவிப் பிறப்பெய்தும்,—
கல்லறைக்கு அப்பாலே.”

# REFLECTIONS ON LOVE

BY V. R. M. CHETTIAR B. A

Love is deep, delicate, subtly sensuous, attracting man and woman to the enjoying centre: here emerges the joy of sweet interlaced harmony of souls under Fancy's focus; Emerson who has realised the truth of sex says that among lovers the soul is wholly embodied and the body is wholly ensouled; beauty is joy. Whitman's poetic outburst, in his Leaves of Grass, surely emphasises the sweetest bliss of Woman's loving intimacy in life's flamboyant lavishness, when the problem of creative sex is sensually excited under tipsy moments of languor. Nietzsche says: "Man is for Woman a means; the purpose is always the child."

Montaigne, the French moralist and thinker says that the tender woman with all her bodily charms has her own intellectual shortcomings: she is steeped in sheer suspicion, vanity and curiosity, and therefore in jealousy too; but there are sweeter occasions when nudity is purity, and when glances grow on glances, kindling a deeper infatuation.

Tennyson's poems harp on the higher phenomenal upheavals of delicate love in beauty's beaming thrall; kisses console tears and elevate the scale of existence.

Shakespeare speaks of Juliet's beauty and love:

> "Her pure and eloquent blood
> Spoke in her cheeks, and so distinctly wrought,
> That one might almost say her body thought."

Even Shakespeare's sonnets are too personal and reminiscential: there are thrilling passages of hot heaving lust in life's teeming tumult; idioms are born of idiosyncrasies of perilous individual sensuality;

Shakespeare's Rape of Lucrece is a burning picture of excited lust:

"Her breasts, like ivory globes circled with blue,
A pair of maiden worlds unconquered;
Her azure veins, her alabaster skin,
Her coral lips, her snow-white dimpled chin.'.

In Tagore's Chitra the dialogue between Chitra and Arjuna is awfully sensuous, where the poet subtly harps on the purity of Nudity in tipsy twisted transparency of deeper existence in Love's growing heat. Sex is often, why naturally, explosive: a naked fusion scares away all confusion, and sublimes the purpose of creation.

In Kalidasa's Sakuntala, we behold Love's lavish inundation of charmed souls who leap into Naked Nature with an incredible passion the poet builds with an artistic reticence; strangers, utter strangers meet and mingle and realise the lavish heat of Love's lingering alarum; kiss and heal thyself- that is Nature's command. Yes!

Dream, Love and Scream!

PRINTED AT THE CITY PRESS, MADURA ROAD, TIRUCHIRAPALLI.

## விரைவில் வெளிவரும்

### "கவிதையின் இலட்சணம்"

விமர்சனம்: ஷெல்லி

தமிழில்: V. R. M. செட்டியார்

●

### "சிந்தனைச் செல்வம்" — தாகூர்

தமிழில்: V. R. M

●

### "இயற்கையும் காதலும்"—எமர்ஸன்

தமிழில்: V. R. M

## உடனே வாங்கிப் படிப்பீர்களா?

| | | | |
|---|---|---|---|
| கீதாஞ்சலி — தாகூர் | | ரூ. | 2—8—0 |
| கனி கொய்தல் | ,, | ... | 2—8—0 |
| வளர்மதி | ,, | ... | 2—0—0 |
| தற்காலத் தமிழ்க் கவிதை—V.R.M. | | ... | 1—0—0 |
| காதற் கோயில் — M. S. கமலா | | ... | 2—0—0 |
| நியாயமா? — T. V. S. | | ... | 1—8—0 |
| விதியும் தன்னம்பிக்கையும்—V.R.M. | | ... | 1—8—0 |
| கடல் கன்னி — 'சுகி' | | ... | 1—8—0 |
| உலக அரங்கு — புதுமைப் பித்தன் | | ... | 1—8—0 |
| சட்டம் எதற்கு — N. R. P. | | ... | 1—8—0 |
| முதல் இரவு — ரகுநாதன் | | ... | 3—0—0 |
| LYRIC FESTOONS by V. R. M. | | ... | 1—0—0 |

# STAR PUBLICATIONS

25 A. CHINA BAZAAR, TEPPAKULAM (P. O)

TIRUCHIRAPALLI